**அக்டோபர் –18**

# TNPSC துளிகள்

- சென்னையிலிருந்து ஒரு அலையன்ஸ் ஏர் நிறுவன விமானமானது இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது. இலங்கையில் எல்டிடிஇ அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து 40 வருட இடைவெளிக்குப் பின்னர் இந்த விமான நிலையத்தில் வணிக நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதை இது குறித்தது.
    - இந்த விமான நிலையத்திற்கு இந்தியா நிதியுதவி அளித்துள்ளது.
- நாட்டில் உள்ள அறை குளிரூட்டிகளின் மிகப்பெரிய உற்பத்தியாளர்களில் ஒன்றான ப்ளூ ஸ்டார் நிறுவனமானது இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரான விராட் கோலியை தனது புதிய விளம்பரத் தூதராக அறிவித்துள்ளது. இந்தப் புதிய விளம்பரப் பிரச்சாரத்தின் முழக்கம் 'விராட்டிற்கு சொந்தமானது, விராட்டினால் நேசிக்கப்பட்டது' என்பதாகும்.
- இஷ்ரத் ரஷீத் என்பவர் காஷ்மீரின் முதலாவது பெண் சர்வதேச மாற்றுத் திறன் கொண்ட கூடைப் பந்தாட்ட வீரராக உருவெடுத்துள்ளார். அடுத்த மாதம் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சர்வதேச சக்கர நாற்காலி கூடைப் பந்துப் போட்டியில் இஷ்ரத் விளையாட உள்ளார்.
- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 17 ஆம் தேதியன்று உலக அதிர்ச்சி தினம் அனுசரிக்கப்படுகின்றது. உலகெங்கிலும் இறப்புகள் மற்றும் இயலாமையை ஏற்படுத்தும் அதிக அளவிலான விபத்துக்கள் & காயங்களின் விகிதம் மற்றும் அவற்றைத் தடுக்க வேண்டியதன் அவசியம் ஆகியவற்றை இந்த நாள் எடுத்துக் காட்டுகின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## இந்தியாவின் முதலாவது சிறந்த வெள்ள எச்சரிக்கை அமைப்பு

- தமிழ்நாடு அரசானது சென்னையில் ஒரு 'சிறந்த வெள்ள எச்சரிக்கை அமைப்பை' ஏற்படுத்த இருக்கின்றது.
- இது மழைக் காலங்களில் நீரில் மூழ்கும் அபாயம் உள்ள பகுதிகளின் விவரங்களைப் பெற அதிகாரிகளுக்கு உதவ இருக்கின்றது.
- சிறந்த வெள்ள எச்சரிக்கை அமைப்பைப் பெற்ற இந்தியாவின் முதலாவது நகரமாக சென்னை உருவெடுக்க இருக்கின்றது.

### *CFLOWS*

- CFLOWS எனப்படும் தொழில்நுட்பமானது இந்தியாவின் முதலாவது ஒருங்கிணைந்த கடலோர வெள்ள எச்சரிக்கை அமைப்பு ஆகும்.
- CFLOWS என்பது வலைதளப் புவியியல் தகவல் முறைமை அடிப்படையிலான ஒரு தீர்வு ஆதரவு அமைப்பு ஆகும்.
- இது வானிலை முன்னறிவிப்பு, ஹைட்ரோலஜிக் (நீரியல்), ஹைட்ராலிக் மற்றும் நீரியக்கவியல் மாதிரிகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகள் மற்றும் முடிவுகளை ஒருங்கிணைக்கின்றது.
- உள்கட்டமைப்புகள், கட்டிடங்கள், சாலைகள் மற்றும் வார்டு எல்லைகளில் வெள்ளத்தின் முப்பரிமாண காட்சிகள் உட்பட 6 கூறுகள் இதில் உள்ளன.

- இது 10 நாட்களுக்கு முன்பே சாத்தியமான நீரில் மூழ்கும் பகுதிகள் பற்றிய முன்னறிவிப்பை வழங்கும்.

*இதனுடன் தொடர்புள்ள அமைப்புகள்*

- மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்தால் கருத்தாக்கம் செய்யப்பட்டு புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் தமிழக அரசு ஆகியவை இணைந்து இதை உருவாக்கியுள்ளன.
- முழுமையாக செயல்படும் CFLOWSற்கான இணைப்பானது தேசியக் கடலோர ஆராய்ச்சி மையத்தினால் (National Centre for Coastal Research - NCCR) மாநில பேரிடர் மேலாண்மை கழகத்திற்கு முறையாக ஒப்படைக்கப்பட இருக்கின்றது.

## மதராஸ் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஏ.பி. சாஹி

- பாட்னா உயர் நீதிமன்றத்தின் தற்போதையத் தலைமை நீதிபதியான ஏ.பி. சாஹி என்பவர் மதராஸ் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றக் கொலிஜியம் பரிந்துரைத்துள்ளது.
- இவர் மதராஸ் உயர் நீதிமன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதியாக இருக்கும் வினீத் கோத்தாரிக்குப் பதிலாக நியமிக்கப்பட இருக்கின்றார்.
- கொலிஜியத்தின் தீர்மானத்தின் படி, திரிபுரா உயர் நீதிமன்றத்தின் தற்போதையத் தலைமை நீதிபதியான சஞ்சய் கரோல் என்பவர் நீதிபதி ஏ.பி. சாஹிக்குப் பதிலாக பாட்னா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட இருக்கின்றார்.

# தேசியச் செய்திகள்

## முதலாவது இந்திய புத்தாக்கக் குறியீடு


- சமீபத்தில் வெளியிடப்பட்ட நிதி ஆயோக்கின் முதலாவது புத்தாக்கக் குறியீட்டில் கர்நாடகா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் புத்தாக்கங்களில் முதல் ஐந்து இடங்களில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இந்தக் குறியீடானது நிதி ஆயோக் அமைப்பின் துணைத் தலைவரான ராஜீவ் குமார் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான அமிதாப் காந்த் ஆகியோரால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது உலகளாவிய புத்தாக்கக் குறியீட்டின் (Global Innovation Index - GII) வரிசையில் உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது பின்வருவனவற்றின் அடிப்படையில் மாநிலங்களைத் தரவரிசைப் படுத்துகின்றது.
  - அவர்களின் கண்டுபிடிப்புத் திறன்,
  - மாநிலங்களுக்கு இருக்கும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள்,
  - புதுமைகளை ஏற்படுத்துவதற்கு கொள்கை வகுப்பாளர்களுக்குத் தேவையான நடவடிக்கைகள்.

*மாநிலங்களின் செயல்பாடுகள்*

- வடகிழக்கு மாநிலங்களில் சிக்கிம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகியவை இந்தக் குறியீட்டில் முதலிடங்களில் உள்ளன.
- ஒன்றியப் பிரதேசங்களில் தில்லி, சண்டிகர் மற்றும் கோவா ஆகியவை

முதலிடங்களில் உள்ளன.

- சத்தீஸ்கர், பீகார் மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை இந்தக் குறியீட்டில் கடைசி இடங்களில் உள்ளன.



**The Report Card**

**Most Innovative States**

| Rank | States | Score |
|---|---|---|
| 1 | Karnataka | 35.65 |
| 2 | Tamil Nadu | 32.98 |
| 3 | Maharashtra | 29.93 |
| 4 | Telangana | 22.06 |
| 5 | Haryana | 20.55 |
| 6 | Kerala | 19.58 |
| 7 | Uttar Pradesh | 19.08 |
| 8 | West Bengal | 18.21 |
| 9 | Gujarat | 16.86 |
| 10 | Andhra Pradesh | 14.51 |

States ranked on 33 indicators

National index needed to help states compete to innovate

India was at 57th position in GII in 2018 among 126 countries

## ஷின்யு மைத்ரி 2019: இந்தோ - ஜப்பான் இராணுவப் பயிற்சி

- இந்திய விமானப் படையானது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் தேதி முதல் அக்டோபர் 23 ஆம் தேதி வரை ஜப்பானிய விமானத் தற்காப்புப் படையுடன் (Japanese Air Self Defence Force - JASDF) 'ஷின்யு மைத்ரி' என்ற கூட்டு இராணுவப் பயிற்சியை மேற்கொள்ள உள்ளது.
- இந்த கூட்டுப் பயிற்சியானது மேற்கு வங்கத்தின் பனகர் நகரில் உள்ள அர்ஜன் சிங் விமானப் படை நிலையத்தில் நடைபெற இருக்கின்றது.
- அதே நாடுகளின் 'படைகளுக்கு' இடையிலான மற்றொரு பயிற்சியானது கிழக்குக் பிராந்தியத்தில் நடைபெற இருக்கின்றது.
- சிறப்பு நடவடிக்கைப் படையின் IAFன் (இந்திய விமானப் படை) C-130 J என்ற விமானம் மற்றும் தந்திரோபாய விமானப் படைகளின் JASDF இன் C-130 H என்ற விமானம் ஆகியவை இந்தப் பயிற்சியில் பங்கேற்க இருக்கின்றன.
- இதுபோன்ற முதலாவது இருதரப்பு இராணுவப் பயிற்சியானது 2018 ஆம் ஆண்டில் ஆக்ராவின் விமானப் படை நிலையத்தில் நடத்தப் பட்டது.




## உலகளாவிய கண்காணிப்புக் குறியீடு - இந்தியாவில் தரவின் தனியுரிமை

- இங்கிலாந்தில் உள்ள காம்பரிடெக் நிறுவனமானது 47 நாடுகளில் கண்காணிப்பின் தனியுரிமை மற்றும் அதன் நிலை குறித்து மதிப்பிட்டு, உலகளாவிய கண்காணிப்புக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- நாடுகள் பின்வருவனவற்றின் அடிப்படையில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
    - அரசியலமைப்புப் பாதுகாப்பு,
    - தனியுரிமை அமலாக்கம்,
    - பயோமெட்ரிக் தகவல்கள்,
    - தரவுப் பகிர்வு போன்றவை.
- காம்பரிடெக்கின் உலகளாவிய கணக்கெடுப்பின் படி, உலகின் முதல் மூன்று கண்காணிப்பு நாடுகளில் இந்தியாவும் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் நாட்டின் கண்காணிப்புக் கட்டமைப்பு என்று வரும்போது ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் அடுத்த இடத்தில் இந்தியா உள்ளது. இந்தியாவானது "தனியுரிமை பாதுகாப்புகளைப் பராமரிக்கும் முறையில் தோல்வி கொண்ட நாடு" என்று அழைக்கப்படுகின்றது.
- ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில், அயர்லாந்து, பிரான்சு, போர்ச்சுகல் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் போதுமான பாதுகாப்பு வசதிகளுடன் முதல் நான்கு இடங்களில் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## தனியார் துறையில் மகப்பேறு காலப் பலன்கள் - கேரளா

- மகப்பேறு காலப் பலன்கள் என்ற சட்டத்தின் வரம்பிற்குள் தனியார் பள்ளிகளையும் கல்லூரிகளையும் கொண்டுவந்த முதல் மாநிலமாக கேரளா உருவெடுத்துள்ளது.
- அரசிடமிருந்து நிதியுதவி பெறும் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் உட்பட தனியார் கல்வித் துறையில் உள்ள பணியாளர்களை இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான மாநில அமைச்சரவையின் முடிவுக்கு மத்திய அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

*இந்த சட்டம் பற்றி*

- இது மகப்பேறு காலத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பை வழங்குகின்றது.
- இது பெண்களுக்கு மகப்பேறு நலனுக்கான உதவியை அளிக்கின்றது - குழந்தையை கவனித்துக் கொள்ளும்போது ஊதிய இழப்பு இல்லாமல் விடுப்பு எடுத்துக் கொள்வது.
- 1961 ஆம் ஆண்டின் அசல் சட்டமானது பெண்களுக்கு 12 வாரங்கள் ஊதியத்துடன் விடுப்பு அளிக்கின்றது.
- 2017 ஆம் ஆண்டில் அச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தமானது அதை 26 வாரங்களுக்கு நீட்டித்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தேசிய ஒருமைப்பாட்டிற்கான இந்திரா காந்தி விருது - சண்டி பிரசாத் பட்

- பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலரும் சிப்கோ இயக்கத்தின் முன்னோடியுமான சண்டி பிரசாத் பட் என்பவருக்கு தேசிய ஒருமைப்பாட்டிற்கான இந்திரா காந்தி விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது மறைந்த பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாக காங்கிரஸ் கட்சியால் நிறுவப்பட்டுள்ளது.
- "நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவிப்பதிலும் பாதுகாப்பதிலும் அவர் ஆற்றிய சேவைகளுக்காக" 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்கான இந்த விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

*சி. பி. பட் பற்றி*

- அவர் தஷோலி கிராம் ஸ்வராஜ்ய சங்கத்தின் கூட்டுறவு அமைப்பை நிறுவியதோடு, 1973 ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் மாநிலத்தின் மண்டலில் முதலாவது சிப்கோ இயக்கத்தை வழிநடத்தினார்.
- இவர் சமூகத் தலைமைத்துவத்திற்காக 1982 ஆம் ஆண்டில் ரமோன் மாக்சேசே விருதும் 1986 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதும் 2005 ஆம் ஆண்டில் பத்ம பூசண் விருதையும் 2013 ஆம் ஆண்டில் காந்தி அமைதிப் பரிசையும் பெற்றுள்ளார்.

# முக்கிய தினங்கள்

## வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் – அக்டோபர் 17

- வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினமானது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 17 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- 1992 ஆம் ஆண்டில், பாதிரியார் ஜோசப் ரெசின்ஸ்கியின் நினைவாக ஐக்கிய நாடுகள் சபையானது அக்டோபர் 17 ஆம் தேதியை வறுமை ஒழிப்பு தினமாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- இவர் 1987 ஆம் ஆண்டில் முதன்முதலில் இந்த நாளைத் தொடங்கி, தனது வாழ்நாள் முழுவதும் வறுமை மற்றும் சமூக விலக்கிற்கு எதிராகப் போராடினார்.
- உலகளாவிய கடுமையான வறுமை விகிதங்கள் 1990 ஆம் ஆண்டில் 36 சதவீதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டில் 8.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான கருப் பொருள், "வறுமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு குழந்தைகள், அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு அதிகாரம்

அளிப்பதற்காக ஒன்றிணைந்து செயல்படுவது" என்பதாகும்.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 100வது ஆண்டு - அக்டோபர் 17

- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 17 தேதியன்று இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றில் ஒரு சகாப்தத்தை உருவாக்கும் தருணத்தைக் குறிக்கின்றது.
- மூன்றாம் சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாம் உலக காங்கிரஸ் ஆனது 1920 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் தேதி தாஷ்கண்டில் எம்.என். ராய், ஈவ்லின் ராய்-ட்ரெண்ட், அபானி முகர்ஜி, ரோசா ஃபிடிங்கோவ், முகமது அலி, முகமது ஷபிக் மற்றும் ஆச்சார்யா ஆகியோருடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பதற்கான களத்தை அமைத்தது.
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (எம்), தனது ஆண்டுக் கொண்டாட்டத்தை கொல்கத்தாவில் உள்ள நேதாஜி உள் அரங்கில் தொடங்கியது.
- ஆனால் தாய்க் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆனது 1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கான்பூரில் இந்தக் கட்சி தொடங்கப்பட்டதாகக் கூறுகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★